# வெற்றிடங்கள்

## திட்டப் பணியாளர்கள் ஆட்சேர்ப்பு

## GCF நக்கிள்ஸ் திட்டம்

**இலங்கையின் நக்கிள்ஸ் மலைத் தொடரின் வாழ்வாதார விவசாயிகள் மற்றும் விவசாய தோட்ட சமூகங்களின் காலநிலை மீள்தன்மையை வலுப்படுத்தல்**

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபம் மற்றும் GCF நக்கிள்ஸ் திட்டத்திற்கான அரச ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி பின்வரும் பதவிகளுக்காக "ஒப்பந்த அடிப்படை" ஒன்றில் திட்ட முகாமைத்துவ பணியாளர்களின் ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற மற்றும் அர்ப்பணிப்புள்ள இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 39.7 மில்லியன் அமெரிக்க டொலர்களின் பங்களிப்புடன் பசுமை காலநிலை நிதியத்தினால் (GCF) பிரதானமாக நிதியளிக்கப்பட்டிருப்பதோடு மேலதிகமாக உள்ளூர் மூலங்களில் இருந்து 9.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் 2028 வரை ஐந்து மாவட்டங்களில் முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பள நிலை 2019.03.05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை திணைக்கள (MSD) சுற்றுநிருபம் மற்றும் 03/2016 சுற்றுநிருபத்தின் அட்டவணை 03 இன் பத்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 62 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி, அதேபோன்று அரச ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அத்தியாவசியமான முன் தேவைகளாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களில் உள்ள வேலை அனுபவம் கூடுதல் அனுகூலமாகும்.

**திட்ட முகாமைத்துவ பிரிவில் (PMU) வெற்றிடங்கள்**

| இல. | PS பிரிவு | பதவி | பதவிகளின் எண். | பொருந்தும் சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|
| 01 | PS3 | பெறுகை நிபுணர் | 01 | |
| 02 | PS3 | கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிபுணர் | 01 | |
| 03 | PS4 | நீர்ப்பாசன பொறியியலாளர் | 01 | |
| 04 | PS4 | உள்ளக கணக்காய்வாளர் | 01 | |
| 05 | PS5 | தொழில்நுட்ப அதிகாரி – நீர்ப்பாசனம் சிவில் | 02 | |
| 06 | PS5 | துணை நிறைவேற்று அதிகாரி/ அபிவிருத்தி அதிகாரி | 02 | |
| 07 | PS5 | நிர்வாக துணை அதிகாரி | 01 | |
| 08 | PS5 | ஊடக அதிகாரி | 01 | |
| 09 | PS5 | பெறுகை அதிகாரி | 01 | |
| 10 | * துணை ஊழியர்கள் | முகாமைத்துவ உதவியாளர் | 03 | 03/2016 பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 01/2029 MSD சுற்றுநிருபம் |
| 11 | | கணக்கு உதவியாளர் | 02 | |
| 12 | | அலுவலக உதவியாளர் | 02 | |

**வலய அலுவலகத்தில் வெற்றிடங்கள் (நாவுல/ திகன/ லக்கல)**

| இல. | PS பிரிவு | பதவி | பதவிகளின் எண். | | | பொருந்தும் சுற்றுநிருபம் |
|---|---|---|---|---|---|---|
| | | | நாவுல | திகன | லக்கல | |
| 01 | PS3 | திட்ட முகாமையாளர் | 1 | - | - | 01/2029 MSD சுற்றுநிருபம் |
| 02 | PS5 | செயற்பாட்டு உதவி அதிகாரி | 3 | 3 | 3 | |
| 03 | * துணை ஊழியர்கள் | முகாமைத்துவ அதிகாரி | 2 | 2 | 2 | 03/2016 பொது நிர்வாக சுற்றுநிருபம் மற்றும் 01/2029 MSD சுற்றுநிருபம் |
| 04 | | அலுவலக உதவியாளர் | 1 | 11 | | |

*** துணை ஊழியர் பதவிக்காக அரச ஆட்சேர்ப்பு நடைமுறை கருத்தில் கொள்ளப்படும்.**

மேலதிக விபரங்களுக்கு **www.irrigationmin.gov.lk** என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.
(மேல் குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபங்களை பார்ப்பதற்கு நிதி அமைச்சின் இணையதளத்திற்கு செல்லவும்)

கீழ் தரப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2025 ஜூன் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வெவ்வேறாக விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**GCF நக்கிள்ஸ் திட்டம்**
**10ஆவது மாடி, இல. 500, இலங்கை மகாவலி அதிகாரசபை,**
**டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10.**

தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர். எந்த வகையான ஆதரவு திரட்டலும் தகைமை இழப்பாக அமைவதோடு அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
திகதி: 15-06-2025